9th March 1959]

Pension applications of Elementary School Teachers

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ M. C. முத்துகுமாரசாமி இடத்தில் இல்லாததால் 659-L எண்ணுள்ள கேள்வியும், பதிலும் சட்டசபை விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

* 659-L *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பென்ஷன் மனுக்களை துரிதமாகப் பைசல் செய்யவேண்டுமென ஜில்லா போர்டு விசேஷ அதிகாரிகளுக்கும், முனிசிபல் கமிஷனர்களுக்கும் 1957-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் அரசாங்கம் பிறப்பித்துள்ள உத்தரவு ஹரிஜன நல ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு பிரயோகிக்கப்படுமா ?

(ஆ) இல்லையானால், அதற்கான காரணங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) The instructions referred to in clause (*a*) of the question are in respect of sanction of pension to teachers in aided and local body schools. As teachers under Harijan Welfare Department are Government servants, they are covered by different rules and instructions.

Basic Training School, Pudukkottai

* 659-M *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have received any requests from the Pudukkottai Municipal Council to shift the Basic Training School to any place outside the Municipal limits?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI V. ARUNACHALA THEVAR : புதுக்கோட்டையிலுள்ள பேசிக் ட்ரெயினிங் ஸ்கூல் அங்குள்ள ராணி ஆஸ்பத்திரிக்கு அடுத்தாற்போல் உள்ள கட்டிடத்தில் இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு வேறு வகையான கட்டிடம் கட்டுவதற்கு இடம் இல்லாததால் அந்தப் பள்ளிக்கூடத்தை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க அரசாங்கம் கருதுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது கேள்வி கேட்டிருப்பது முனிசிபாலிட்டியில் அம்மாதிரியான சிபார்சு செய்திருக்கிறார்களா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு இல்லை என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது கேட்கிற கேள்வியைப்பற்றிய தகவல் கிடையாது. அதனால் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1959–60—*cont.*

MR. SPEAKER : To-day the hon. Member Sri S. Pakkirisami Pillai, leader of the Socialist Party, will speak first. He is given half-an-hour. The Hon. Minister Sri M. Bhaktavatsalam also will participate in the general discussion to-day. The Minister can intervene at any time he wants and speak. The hon. Member Sri S. Pakkirisami Pillai will now speak.